ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

कदाचित् सत्सङ्गे सुकृतिपठने च स्मररिपो
हतं चेदं चित्तं मम सकलदुष्कर्मसदनम् ।
समस्तं त्यक्त्वा स्वं स्फुरति चरितं निर्वृतमिव
क्षणाद्दुर्मार्गे यात्यहह करवै किन्न्वयमहम् ॥ २० ॥

𑌕𑌦𑌾𑌚𑌿𑌤𑍍 𑌸𑌤𑍍𑌸𑌙𑍍𑌗𑍇 𑌸𑍁𑌕𑍃𑌤𑌿𑌪𑌠𑌨𑍇 𑌚 𑌸𑍍𑌮𑌰𑌰𑌿𑌪𑍋
𑌹𑌤𑌂 𑌚𑍇𑌦𑌂 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌮𑌮 𑌸𑌕𑌲𑌦𑍁𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑌸𑌦𑌨𑌮𑍍 ।
𑌸𑌮𑌸𑍍𑌤𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌂 𑌸𑍍𑌫𑍁𑌰𑌤𑌿 𑌚𑌰𑌿𑌤𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌮𑌿𑌵
𑌕𑍍𑌷𑌣𑌾𑌦𑍍𑌦𑍁𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌗𑍇 𑌯𑌾𑌤𑍍𑌯𑌹𑌹 𑌕𑌰𑌵𑍈 𑌕𑌿𑌨𑍍𑌨𑍍𑌵𑌯𑌮𑌹𑌮𑍍 ॥

ஒருஸமயம் மஹான்களுடைய சேர்க்கை ஏற்படுங்காலத்திலும் சிறந்த மோக்ஷஸாதனமான கிரந்தங்களைப் படிக்கும்பொழுதும் ஹே மன்மதனுக்கு வைரியான ஸ்ரீ பரமேச்வர! ஸகலமான பாபகர்மாக்களுக்கும் இருப்பிடமாயும் மிகவும் கெட்டதாயுமிருக்கும் இந்த என்னுடைய மனமானது தன்னுடைய கெட்டநடத்தைகளைப் பூராவையும் விட்டுவிட்டு விஷயங்களில் பற்றுதலற்றதுபோல் நிர்மலமாய்ப் பிரகாசிக்கின்றது. ஒரு நிமிஷத்திற்குள் பாபச்செயல்களில் தானாக ஓடுகின்றது. இவ்விதம் பலாத்காரமாய் உலக வியாபாரங்களில் செல்லும் மனத்தைக்கொண்டு பரலோகத்திற்கு ஸாதகமான எந்தக் காரியத்தைத்தான் என்னால் செய்யமுடியும்? நான் என்ன செய்வேன் கஷ்டம்!

ஹே சந்திரசேகர! இக்கொடிய ஸம்ஸாரதுக்கத்திலிருந்தும் வெளிவரவேண்டுமானால் மோக்ஷஸாதன மார்க்கங்களை அனுஷ்டிக்கவேண்டும். எந்தமாதிரி ஸாதனத்தை அனுஷ்டிப்பதாயிருந்தாலும் அதற்கு மனம் ஸ்வாதீனமாயிருக்கவேண்டும். அதன்றியில் ஒரு காரியமும் நடைபெறாது. முக்கிய ஸாதனமாய் விளங்கும் அது நான் எவ்வளவு முயற்சி எடுத்துக்கொண்டாலும்ஸ்வாதீனப்படாமல்கெட்டவழிகளிலேயேசெல்லுகின்றது. ஆகையால் தங்களுடைய அநுக்ரஹத்தால்தான் நான் உத்தம கதியையடையவேண்டியிருப்பதால் அவ்விதம் கருணைபுரியவேண்டுமாய் வேண்டுகிறேன். சுபம்!

உபபத்திராதிபர்.

# ஐயவிஞ.

(450-வது பக்கத்தொடர்ச்சி)

தீண்டத்தகாதவர்கள் விஷயமாய் ஏற்பட்டதும், அனுஷ்டானத்தில் நடைபெற்றுவருவதும், சில வைதிகர்களால் கூறப்படுவதுமான நிர்ப்பந்தங்கள் எதுமுதல் ஏற்பட்டன ? யாரால் ஏற்படுத்தப்பட்டன என்பதை முந்தி விசாரிக்கவேண்டும். தீண்டத்தகாதவர்களை ஹிம்ஸிக்கவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்களென்று சில கருணாநிதிகளால் நிந்திக்கப்படும். தற்காலத்திலுள்ள வைதீகர்களால் இவை ஏற்படுத்தப்பட்டனவா ? அல்லது பிறராலா ? தற்கால வைதிகர்களால் ஏற்படுத்தப்படவில்லையென்பது யாவருமறிந்த விஷயமே. அன்றேல் இக்கொடிய நிர்ப்பந்தத்தையேற்படுத்தியவர் யார் ? சாஸ்திரங்களே. அவ்வித சாஸ்திரங்கள் எவையென்பதையும் துவக்கத்தில் விஸ்தாரமாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சாஸ்திரவிதியென்பது 'சுருதிஸ்மிருதீமமைவ ஆக்ஞா' என்று பகவான் கீதையில் கூறியிருக்கிறார். கடவுளின் ஆக்ஞையேயாகும். அவ்வித ஆக்ஞையை மாற்றவோ, சேர்க்கவோ நம்போன்றவற்கு அதிகாரமில்லையென்பது திண்ணம். தாயாயிருப்பினும் சாஸ்திரம் விலக்கவேண்டுமென்று கூறினால் விலக்கியே தீரவேண்டும். தெய்வமாய் பூஜிக்கக்கூடிய தாய்விஷயத்தில்கூட இதை மாற்ற அதிகாரமில்லையென்றால், மற்றவர்கள்விஷயத்தில் சொல்லவும் வேண்டுமோ ? சாஸ்திரந்தான் ஏன் இவ்விதம் பக்ஷபாதமாகக் கூறுவதென்று கேழ்ப்பதும் உசிதமில்லை.

**गुणकर्मविभागश:** குணகர்மவிபாகஶ: ।

அவாவர்களின் புண்ணிய பாப கர்மங்களுக்குத் தக்கவாறு ஜன்மாவை அடைகிறார்கள். நான் பக்ஷபாதமாய் ஒருவரை மேலாகவும், மற்றொருவரைக் கீழாகவும் செய்யவில்லையென்று ஸ்ரீ பக

வானே கீதாசாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறார். சாஸ்திரங்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற விதியை கஷ்டமோ சுகமோ எவரும் முடிந்தவரை அனுஷ்டித்தே தீரவேண்டும். இவ்விதமிருக்க தீண்டத்தகாதவர்கள்விஷயத்தில் சாஸ்திரவிதியைத் தள்ள வேண்டுமென்றும், அதற்கு வைதிகர்கள் உடன்படவில்லையென்றும் கூச்சலிடுவது மிக அறிவின்மையே. இன்னும் தேவாலயங்களில் நான்குவருணத்தவர்களும் உட்சென்று தாங்கள் இஷ்டப்படி கடவுளைப் பிரார்த்தித்து தம் தம் பிறவிப்பிணியை அகற்ற முயலுவதுபோல் தீண்டத்தகாதவர்களும் ஏன் முயற்சிக்கக் கூடாது. அவர்களை வரக்கூடாதென்று தடுத்து கஷ்டப்படுத்துகிறார்களே, அது உசிதமில்லையென்று சிலர் கருதுகிறார்கள் இதுவும் ஸரியல்ல.

இந்துக்களென்று பொதுவாய்க் கூறப்பட்டாலும் அவர்களுக்குள் பல ஜாதிபேதங்களும் ஆராதிக்கிற ஈசுவரமூர்த்திகளில் பல பேதங்களுமிருக்கின்றன. விஷ்ணுபக்தரான சிலர் சிவனைத் தரிசிப்பதில்லை; சிவபக்தரான சிலர் விஷ்ணுவையும் தரிசிப்பதில்லை. ஈசுவரமூர்த்திகளில் எந்தெந்த அதிகாரிக்கு எந்தெந்த மூர்த்திகளில் அபிமானம் ஏற்படுகின்றதோ அந்தந்த மூர்த்தியை ஆராதித்து அவனவன் இஷ்டஸித்தியை அடையவேண்டுமென்று கருதியே சாஸ்திரங்களில் பல மூர்த்திகள் கூறப்பட்டிருக்கின்றன. இக்கருத்தைக்கொண்டே ஆதியில் அவதரித்த ஸ்ரீ பரமாசார்யாளும் ஆறுமதங்களைப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். அதிக தாமஸகுணம் பொருந்திய ஜனங்களுக்குத் தாமஸகுணமுள்ள ஈசுவரமூர்த்திகளை ஆராதிப்பதில்தான் பிரியமிருக்கும். அதற்குத் தான் அவர்கள் அதிகாரியாகிறார்கள். தீண்டத்தகாதவர்களுக்கு உபாஸிக்கக்கூடிய மூர்த்திகள் சில உண்டு. அவைகளை அவர்கள் ஜாதிமுறைப்படி ஆராதித்தால் இஷ்டஸித்தியைப் பெறுவார்களென்பது திண்ணம். கடவுளுடைய அனுக்ரஹத்தைப் பெறுவதற்கு அவரவர்கள் பக்திசிரத்தையே முக்கிய காரணமாகுமேயல்லாமல் மூர்த்திபேதம் காரணமல்லவென்று கீதாசாஸ்திரத்தில் பகவானே நேரில் வெளியிட்டிருக்கிறார். ஆகையால் தீண்டத்தகாதவர்களும் அவர்களிருக்குமிடத்திலேயே ஓரிடத்தில் ஏதாகிலும் ஒன்றை தங்கள் இஷ்டதேவதையாகப் பாவித்து சிரத்தையுடன் ஆராதித்தால், நான் அனுக்ரஹம் செய்யமாட்டேனென்றும், தாங்கள் வருவதற்கு யோக்கியமில்லாத பெரிதான தேவா

லயங்களில் வந்து தரிசித்தால்தான் அனுக்ரஹம் செய்வேனென்றும்; கடவுள் சொல்லியிருக்கிறாரா? எந்தவிடத்தில்? எந்தமாதிரியார் ஆராதித்தாலும் பக்திசிரத்தையுடனே ஆராதிக்கும்பக்ஷத்தில் அவர்கள் இஷ்டத்தையளிக்க நான் சித்தமாயிருக்கிறேனென்று ஸ்பஷ்டமாய் பகவான் சொல்லியிருப்பதைச் சற்றேனுங்கவனியாமல் எதற்காக வீண்வாதம் செய்ய முன்வரவேண்டும். இந்த ஜாதியிற் பிறந்த நந்தனர் எந்த ஆலயத்தில் உட்புகுந்து தரிசனம் பண்ணி முக்தியடைந்தாரோ தெரியவில்லை. அவரைப் பலர் ஆலயத்திற்குள் வரும்படி மிக வேண்டியும் தாம் வருவதற்கு அருகரல்லவென்றும், வரமாட்டேனென்று வியந்து கூறி, வெளிவீதிகளிலிருந்தே ஸ்ரீ நடராஜரைத் தரிசித்தாரென்று பெரிய புராணத்தில் கூறப்பட்டிருக்கின்றதே. தற்காலத்திலுள்ளவர்கள் அவரைக் காட்டிலும் எந்த விஷயத்தில் மேலானவர்கள்? ஆலயப்பிரவேசத்தில் நந்தனருக்கில்லாத அதிகாரம் இவர்களுக்கு எப்படி ஏற்பட்டதென்பதையும் பொறுமையுடன் சற்று கவனித்திருந்தால் பிறர்பேரில் வீணன அபவாதத்தைச்சுமத்த முன்வருவது ஞாயமில்லை. மேலும் பெரிய ஸபையில் பிராமணர்கள் நந்தனர் சரித்திரத்தைப் பக்தியாய்ப் பிரஸங்கஞ்செய்து அவரைப்பற்றி போற்றவில்லையா. இவையெல்லாம் அவர்களை ஹிம்ஸிக்கவேணுமென்று செய்கிறார்கள்? இவைகளை நன்கறிந்திருந்தும் அறியாதவர்கள்போல் பிறர்மேல் குற்றஞ்சாட்டுவது அறிஞர்கட்கழகல்ல.

(இன்னும்வரும்) உபபத்திராதிபர்.

# நவராத்திரி.

(462-வது பக்கத்தொடர்ச்சி)

## ஸ்காந்தபுராணத்தில் கூறியுள்ள கதையின் சுருக்கம்.

பூமண்டலத்தில், இமயமலைக்கருகில் நீர்வளத்தாலும் நிலவளத்தாலும் சிறந்து விளங்கிய ஓர் திவ்ய தேசத்தில், சுகேது என்னும் பெயருள்ள அரசன் ஒருவன் நீதிதவறாமல் அரசுபுரிந்து வந்தான். அவன் மனைவி பெயர் சுவேதி. அவள் கற்பிற் சிறந்தவள், கணவனையே தெய்வமாகக் கொண்டவள், அழகில் லக்ஷ்மியையும் வென்றவள். சுகேதுவும் சுவேதியும் ரதியும் மன்மதனும்போல் வெகுகாலம் வாழ்ந்துவந்தார்கள்.

காலக்கொடுமையால் சுகேதுவின் பிதுர்வர்க்கத்தரசர்கள் (தாயாதியான அரசர்) கலகஞ்செய்ய அவர்களுடன் போர்புரிந்து தோல்வியடைந்து காட்டிற்கு ஓடினன். நாடு நகரங்களைப் பகைவர் கைப்பற்றிக்கொண்டனர். அவன் பத்தினி சுவேதி என்பவள் தன் நாயகன் யுத்தத்தில் தோல்வியடைந்ததையும், காடாளச் சென்றதையும், கேள்வியுற்றுத்தீயில் விழுந்த புழுபோல் துடித்து, நாயகனைத் தேடத் தானும் காட்டினுள் புகுந்தாள்.

பகைவர்கள் விட்ட வில், வேல், வாள், அஸ்திரம், சஸ்திரம், முதலிய ஆயுதங்களால் உண்டான காயத்தினுலும், பசியினுலும், துக்கத்தினுலும், வருந்தி நடக்கவும், சக்தியற்ற தன் ஆருயிர்த் தலைவனைக் கண்டாள்.

மிகவும் துக்கமடைந்தாளாயினும், மனந்தளராமல் இதவசனங்கூறி நாயகனைத் தேற்றினள், காய் கனிகளால் பசியையாற்றினுள், சரீரத்திலுள்ள ரணங்கள் ஆறும்படியான சிகிச்சைகளும் செய்தாள், ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்குச் செல்லவேண்டின் நாயகனைத் தோளிலாவது, முதுகிலாவது, தலையிலாவது சுமந்துசெல்வாள். இங்ஙனமாக அவர்கள் இருவரும் தென் திசையை நோக்கி வெகுதூரம் வந்துவிட்டனர்.

வழியில் தீர்த்தயாத்திரைக்காகப் பஞ்சவடி தீரத்தை நோக்கிவரும் ஆங்கீரஸமுனிவர், மிகவும் வருந்திக்கொண்டிருக்கும் இந்த ராஜ தம்பதிகளைக் கண்டனர்; வரலாற்றைக் கேட்டறிந்து உங்களுக்கு நல்லகாலம் சீக்கிரம் வரும்; பயப்படாதீர்கள்; என்று தைரியம் கூறினர். தன்னுடன் அவர்களையும் பஞ்சவடிக்கு அழைத்துக்கொண்டு சென்றனர்.

(அந்தப்பஞ்சவடி நாஸிகாத்திரியம்பகத்திற்குச் சமீபத்திலுள்ளது. ஐந்து ஆலமரங்களால் சூழப்பெற்றது. கோதாவரி நதிக்கரையிலுள்ளது, திவ்யமான மணற்குன்றுகளாலும், சோலைகளாலும் சூழ்ந்துள்ளது. அங்குக் குயில், மயில் முதலிய பக்ஷிகளும் மான் முதலிய மிருகங்களும் உண்டு. அப்பஞ்சவடி திருமூர்த்தியராகிய பிரும்ம, விஷ்ணு, ருத்திரர்களின் பத்தினிமார்களான ஸாஸ்வதி, லக்ஷ்மி, துர்க்கை என்ற மூவரும் வாஸம் செய்கிற இடம்.)

முனிவர் ஆங்குள்ள புண்ணிய தீர்த்தத்தில் ராஜபத்தினியாகிய கற்பிற்சிறந்த சுவேதியை முறைப்படி நீராடச்செய்தார். முனிவர் தானும் ஸ்நானம் செய்து ஸந்தியாவந்தனம்முதலாகிய நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டனர். பிறகு ராஜபத்தினிக்

கு ப் புரட்டாசி-மீ பூர்வபக்ஷம் பிரதமைமுதல் மூன்றுநாள் ருத்திரியையும், சதுர்த்திமுதல் மூன்றுநாள் லக்ஷ்மியையும், சப்தமி முதல் மூன்றுநாள் ஸரஸ்வதியையும் தீபதூபங்களாலும், சந்தன புஷ்பங்களாலும் அதிக நியமத்தோடு பூஜை செய்வித்தனர். கடைசியான தசமிதினத்தில் மங்கலப்பொருள்களால் புனர்பூஜை செய்வித்து, விரதத்தைப் பூர்த்திசெய்தனர். பின்பு ராஜதம்பதிகளை அவ்விடத்திலேயே வசிக்கச்செய்துவிட்டு ஆங்கிரஸர் தம்மிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

ஸரஸ்வதி, லக்ஷ்மி, துர்க்கை என்னும் மூன்று தேவிமாரின் அனுக்கிரஹத்தைப் பெற்ற சுவேதி கர்ப்பமுற்று உரிய காலத்தில் ஓர் ஆண்குழந்தையைப் பெற்றாள்.

இதைத் தன் ஞானதிருஷ்டியால் உணர்ந்த அவ்வாங்கிரஸ முனிவர் குழந்தையைப் பார்க்க ஆவலோடு வந்தனர். அக்குழந்தை மிக்க தேஜஸ் உள்ளவனாய் இருக்கக்கண்டு சூரியப்பிரதாபன் என்று நாமகரணம் சூட்டினர். அக்குழந்தை நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளருங்காலையில் உரிய பருவத்தில், வித்தியாப்யாசம் செய்வித்தார். ஆயுதப்பயிற்சியிலும் வல்லவனானான், நற்குண நற்செய்கையால் சிறந்து விளங்கினான்.

ஒருநாள் தன் பெற்றோர்கள் தாயத்தார் கொடுமைகளைப் பிள்ளையிடம் சொல்லக்கோபங்கொண்டு போருக்கெழுந்து எதிர்த்தவர்களைத் துரத்தியடிக்க, அவர்கள் உயிர்தப்பினால் போதுமென்று ஓட்டம் பிடித்தனர். ஜெயவீரனான சூரியப்பிரதாபன் தன் பெற்றோருடன் நகரத்துட் பிரவேசித்து ஸகல ஆடம்பரங்களுடனும் மகுடாபிஷேகம் செய்துகொண்டு நீதிதவறாமல் வெகுகாலம் அரசாக்ஷி செய்துவந்தான்.

அன்றுதொட்டு இப்பரதகண்டத்தில் வசிப்போர் இவ்விரதத்தை நிரம்பப்பயபக்தியோடு அனுஷ்டிக்கலாயினர். சிலர் முற்கூறிய மூன்று தேவிமாரையும் விதிப்படி கலசங்களில் ஆவாகனம் செய்து பிரதமைமுதல் நவமிவரையில் ஒன்பதுநாளும் பூஜித்து விரதம் அனுஷ்டிக்கின்றனர். இன்னும் சிலர் ஸப்தமியில் வருகிற மூலநக்ஷத்திரம் முதல் மூன்றுநாளைக்குப் பூஜித்து முற்கூறிய விரதத்தை அனுஷ்டிக்கின்றனர். பலர் நவமியன்று ஸரஸ்வதிக்குறிய ஸுவர்னம், ரத்தினம் முதலியவைகளையும், ருத்திரிக்குறிய ஆயுதவகைகளையும் வைத்துப் பூஜித்துவருகின்றனர்.

K. நாராயணஸாமி அய்யர்,
டீசர், முனிஸிபல் ஹைஸ்கூல்.

## அகிலபாரதவர்ஷீய ப்ராம்மண ஸம்மேளனம்.

நவம்பர்மீ 6, 7, 8 இம்மூன்று தினங்களிலும் ஷை ஸபை நடைபெறும். கனம். தர்பாங்கா மஹாராஜா தலைமை வஹிப்பார். ப்ரதிவாதிபயங்கரமடம் ஸ்வாமிகள் மஞ்ஜுபாஷிணியில் கூறிய (வைச்யர் பண உதவி புரிவதால் பிராம்மண தர்மத்திற்கு ஏதேனும் பங்கம் வருமோ என்ற) சங்கைக்கு இடமில்லை. 700-பண்டித பிரதிநிதிகள் வருவதாக தகவல் கிடைத்திருக்கிறது என்று தந்தி மூலம் எனக்கு அறிவிப்பதோடு ஷை காரியதரிசி தக்ஷிணதேசத்துப் பண்டிதர்கள் ஏராளமாக வரவேண்டுமெனப் பிரார்த்திக்கிறார். எனது ப்ரயாணம் எப்படியிருந்தாலும் தக்ஷிண தேசத்துக் காரியதரிசி என்ற முறையில் கிளம்பும் பிரதிநிதிகளுக்குத் தக்க உதவிபுரியக் கடமைப்பட்டுளேன். தனி கம்பார்ட்டுமெண்ட் ரிஸர்வ் செய்ய யார் யார் எப்போது எத்தனை பேர் கிளம்புகிறார்களென முன்னதாக எனக்கு அறிவிக்க வேண்டுகிறேன். மைலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜில் ஒன்று கூடும்படி காரியதரிசி கூறினார். இங்கு ஸ்ரீ சங்கரமடம் தம்புசெட்டி வீதியிலும் தங்க ஸ்ரீ ஜகதாசாரியாள் அனுக்கிரஹிப்பார்கள். ஆதலால் தயை செய்து வரும் தேதியையும், தங்கள் கணக்கையும் தவறாமல் அனுப்ப வேண்டுகிறேன்.

---

## ஓர் வரவேற்புக் கூட்டம்.

சென்னை அமரகலாவிலாஸினீ ஸபை காஞ்சிநகர் பிராம்மண ஸபை இவைகளின் ஆதரவின் கீழ் சென்னை தம்புசெட்டிவீதி ஸ்ரீ சங்கரமடத்தில் 9-10-28 மாலை 5-30க்கு கனம் ராஜப்ரதிநிதியிடம் விவாஹவயது மசோதாவை நிறைவேற்றாமலிருப்பதற்காக தூது சென்று வந்த பிரும்மஸ்ரீ M. K. ஆசார்யர், K. V. ரங்கஸாமி அய்யங்கார், V. T. ராமஸ்வாமி அய்யர் இவர்களைக்கொண்டாடி வரவேற்கவும் இனி இதுவிஷயமாகச் செய்யவேண்டிய வேலையை யோசிக்கவும் ஓர் மஹாஸபை கூடியது. எண்ணிறந்த ஆண்களும், பெண்களும், குழுமியிருந்தனர். ஷை ஸபை மாணவர்கள் ஸ்துதிபாட ஸ்ரீ ஸோமதேவ சர்மாவின் பிரேரணைக்கிணங்கி பிரும்மஸ்ரீ பச்சயப்பன்காலேஜ் பண்டிதர் அநந்தாசாரியர்ஸ்வாமி தலைமை வஹித்தார்.

ஷை தலைவர்களுக்கு வாழ்த்துக் கூறும் தீர்மானத்தை கோவிந்தப்பன் நாயகன் ஸ்கூல் பண்டிதர் பிரும்மஸ்ரீ கா· ராமகிருஷ்ணசாஸ்திரிகள் பிரேரிக்க ஸ்ரீ காமகோடிபீடம் ஆஸ்தான ப்ரசார பண்டித பிரும்மஸ்ரீ ஜகதீசுவரசாஸ்திரிகள் ஆமோதிக்க

பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா அனுவதிக்க ஏகமனதாய் நிறைவேறியது.

ராவ்ஸாஹெப் சுப்பய்யா, N. ஸ்ரீனிவாசாரியர் B.A.,B.L. (வர்ணாச்ரம ஸபைத் தலைவர்) M. அநந்தராவ் (பிராமணஸபை காரியதரிசி) V. T. ராமஸ்வாமி அய்யர் B.A.,B.L. பண்டிட் அநந்தாசாரியர் (பச்சயப்பன் கலாசாலை) வெ. ஸோமதேவசர்மா (M. H. ஸ்கூல் பண்டிட்) இவர்களைக் கொண்ட ஓர் கமிட்டியை நியமித்து "மதவிருத்தசட்ட நிவாரண சங்கம்" என்ற பெயருடன் தக்க சமயத்தில் தகுந்த வேலை செய்யும்படி வேண்டுகிறது. நமது பிரதிநிதியான ஸ்ரீமான் S. ஸ்ரீனிவாஸய்யங்காரவர்களைத் தனது ஸொந்தஅபிப்பிராயம் எப்படியிருந்தாலும் ஓட்டர்களான எங்கள் அபிப்பிராயப்படிஅச்சட்டத்தை எதிர்க்கும்படிகட்டளையிடுகிறது. 3. ஜகத்குரு ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபதி சங்கராசார்யஸ்வாமிகள இவ்விஷயத்தில் அதிக அருள் புரிந்து ஸஹாயம்செய்வதைக் கொண்டாடி ஸ்ரீ ஸ்வாமிகளது திருவடிகளில் இச்சபையின் பக்திபூர்வமான ஸாஷ்டாங்க நமஸ்காரங்களைஸமர்ப்பிக்கிறது என்ற தீர்மானங்களை அநந்தராவ், ராவ்ஸாஹெப் சுப்பய்யா, ராமனுஜ தீக்ஷிதர், முதலியவர்கள் ஆமோதிக்க ஏகமனதாக நிறைவேறின. தலைவர்களுக்கும், மற்றவர்களுக்கும் வந்தனம் கூறி மாலையிட்டு ப்ரஸாதமளிக்க இரவு எட்டு மணிக்கு ஸபைகலைந்தது. வைதிகப் பெண்மக்களைக் கொண்ட பல கூட்டங்களை நடத்திக் கண்டனத்தீர்மானங்களனுப்பிய ஸ்ரீமான் வக்கீல் நாகேசுவர சாஸ்திரியாரின் மனைவியும் வந்திருந்தாள்.

மதப்பிரசாரம்:— ஸ்ரீகாஞ்சீகாமகோடிபீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரியஸ்வாமிகள் மதப்ரசார நிமித்தம் ஆங்காங்கு அனுப்பிய பிரும்மஸ்ரீ ஜகதீசுவரசாஸ்திரிகள சென்றவாரம் சென்னைக்கு வந்தார்கள். அமரகலாவிலாஸினீ ஸபயின் ஆதரவில் ஸ்ரீ சங்கரமடத்தில் பக்தியோகம் என்பதைப்பற்றி ஓர் அழகிய உபன்யாஸம் செய்தார். பலர் கேட்டு பரமானந்தமடைந்து ஸ்ரீ பரமாசார்யாளைப் போற்றினர். மாம்பலத்தில் நடப்பதாயிருந்த மற்றோர் ஸபை மழை காரணமாக நின்றுவிட்டது. இவ்வாரம் சென்னையை விட்டு மதுரை செல்வார்.

ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா.

# ஸந்தியாவந்தனம்.

(434-வது பக்கத்தொடர்ச்சி.)

மேலும் இச்சந்தியாவந்தனத்தை முற்காலத்தில் பெரியோர்களாகிய நமது முன்னோர்களும் ரிஷிகளும்தேவதைகளும் பிரும்மா விஷ்ணு மஹேசுவரர் என்று கூறப்பட்ட மும்மூர்த்திகளும் கூட செய்துகொண்டே வந்திருக்கிறபடியால் நாம் அனுஷ்டிக்கவேண்டும் என்பதையும் சொல்லவும் வேண்டுமா?

ब्रह्मणोपासिता सन्ध्या विष्णुना शङ्करेण च ।
कस्तां नोपासयेद्देवीं सिद्धिकामो द्विजोत्तमः ॥

ப்ரஹ்மணோபாஸிதா ஸந்த்யா விஷ்ணுநா ஶங்கரேண ச ।
கஸ்தாம் நோபாஸயேத்தேவீம் ஸித்திகாமோ த்விஜோத்தம: ॥

ஸந்தியாவந்தனமானது உலகத்திற்கே ஈசுவரர்களான பிரும்மா விஷ்ணு மகேசுவரன் முதலியவர்களால் அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இப்படியிருக்கையில் எந்த ப்ராம்மண ச்ரேஷ்டன் அதை உபாஸிக்காமல் இருப்பான்?

2. अथाप्लुतोऽम्भस्यमले यथाविधि क्रियाकलापं परिधाय वाससी ।
चकार सन्ध्योपगमादि सत्तमः हुतानलो ब्रह्म जजाप वाग्यतः ॥
उपस्थायार्कमुद्यन्तं तर्पयित्वात्मनः कलाः ।
देवानृषीन् पितॄन्वृद्धान् विप्रानभ्यर्च्य चात्मवान् ॥

அதாப்லுதோம்பஸ்யமலே யதாவிதி க்ரியாகலாபம் பரிதாய வாஸஸீ । சகார ஸந்த்யோபகமாதி ஸத்தம: ஹுதாநலோ ப்ரஹ்ம ஜஜாப வாக்யத: ॥

உபஸ்தாயார்க்கமுத்யந்தம் தர்ப்பயித்வாத்மந: கலா: ।
தேவாந்ருஷீந் பித்ரூந்வ்ருத்தாந் விப்ராநப்யர்ச்ய சாத்மவாந் ॥

சுருதிஸ்மிருதிகளில் கூறப்பட்ட கர்மங்களை ஒவ்வொருவரும் அநுஷ்டிக்கவேண்டும் என்ற தர்மத்தை நடத்திக்காட்ட அவதாரமெடுத்த ஸ்ரீ கிருஷ்ணபகவான் " சுத்தமான ஜலத்தில் ஸ்நானம் செய்து வஸ்திரங்களையுடுத்திக்கொண்டு ஸந்தியோபாஸனம் முதலிய கர்மங்களை விதிப்படி செய்தார். பின்னும் ஸாதுக்களிற்

சிறந்த ஸ்ரீ கிருஷ்ணன் அக்னிகாரியத்தைச்செய்து காயத்ரீயை ஜபித்தார், பிறகு ஸூரியன் உதயமானவுடன் உபஸ்தானத்தைச் செய்து தம்முடைய அம்சரான தேவர்களுக்கும், ரிஷிகளுக்கும், பித்ருக்களுக்கும் தர்ப்பணம்செய்து பெரியோர்களான பிராம்மணர்களைப் பூஜித்தான்" என்ற பாகவதம் தசமஸ்கந்தவசனத்தினுல் ஸ்ரீ கிருஷ்ணபகவானும் ஸந்தியாவந்தனத்தைச் செய்திருக்கிறுர்.

3. பாண்டவர்கள் முதலியோரும் குருக்ஷேத்திரத்தில் நடந்த யுத்தத்தில்கூட போர்முனையில் நின்றுகொண்டே ஸந்தியாவந்தனத்தை அநுஷ்டித்திருப்பதை ஸ்ரீமன் மகாபாரதத்திலிருந்து அறியலாம்.

4. ऋषयो दीर्घसन्ध्यत्वादायुर्दीर्घमवाप्नुयुः ।
प्रज्ञां यशश्च कीर्तिं च ब्रह्मवर्चसमेव च ॥

𑌋𑌷𑌯𑍋 𑌦𑍀𑌰𑍍𑌘𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌦𑌾𑌯𑍁𑌰𑍍𑌦𑍀𑌰𑍍𑌘𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑍁𑌃 ।
𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌂 𑌯𑌶𑌶𑍍𑌚 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌰𑍍𑌚𑌸𑌮𑍇𑌵 𑌚 ॥

முற்காலத்தில் ரிஷிகள் வெகுகாலம் ஸந்தியாவந்தனத்தை அனுஷ்டித்ததின்பயனுக நீண்ட ஆயுளையும், சுத்தமான ஞானத்தையும், கீர்த்தியையும், பிரம்மவர்ச்சஸ் என்ற தேககாந்தியையும் படைத்திருந்தனர். மித்திரர்களே! விசுவாமித்திரர், ச்யவனர் முதலிய பல ரிஷிகள் ஆயிரக்கணக்கான வருஷங்கள் தபஸ் செய்துகொண்டிருந்தனர் என்றும் அக்காலங்களில் அவர்களின் சரீரமானது புத்தினுலும், திருணங்களாலும், மூங்கில்களாலும் மூடப்பட்டும் எரும்புகள் ஸஞ்சரித்து அவர்களின் மேதஸ், மாம்ஸம், தோல், இரத்தம் முதலியவைகள் புஜிக்கப்பட்டும் இருந்ததென்று இதிஹாஸங்கள்மூலமாய்க் கேள்வியுற்றிருக்கிறீர்கள் அல்லவா? அவர்கள் தபஸ்செய்த காலமே ஆயிரக்கணக்கான வருஷங்கள் எனின் அவர்களின் ஆயுஷ்பிரமாணத்தை நீங்களே ஆராய்ந்தறியுங்கள். அவர்கள் மஹாஞானிகளாகையால் ஸந்தியாவந்தனத்தின் மகிமையை அறிந்து அதையனுஷ்டித்து வெகுகாலம் ஜீவித்திருந்தனர். நாமோ அதன் மகிமையை எள்ளளவுகூட அறியாமல் அனுஷ்டானம் செய்யாமலிருப்பதால் அற்பாயுள் உடையவர்களாயும் பலவித நூதனமான வியாதிகளுக்கு அதிதிகளாயும் இருந்துவருகிறேம்.

இன்னும் இதற்குமுன் அரசாங்கங்களில் மந்திரி முதலிய மிகவும் பொறுப்புள்ள உத்யோகங்களை வஹித்துவந்த பெரியோர்களும் தங்களுடைய வைதிக கர்மாக்களைக் கொஞ்சமும் தவறாது நடத்தி உத்தியோகப் பொறுப்பையும் செவ்வனே நடத்திவந்தார்கள் என்ற விஷயத்தைத் தற்காலம் உத்யோகத்தில் அமர்ந்திருப்பதால் ஸந்தியாவந்தனத்திற்கு அவகாசமில்லை என்று குறை கூறும் நேயர்கள் மறந்துவிட்டனர்போலும்,

5. ஸந்தியாவந்தனத்தைச்செய்ய மற்றுமோர் காரணமும் உண்டு. ஒவ்வொரு மனிதனும் பிறக்கும்பொழுதே தேவரிணம், பித்ருரிணம், ரிஷிரிணம் என்ற மூன்று கடன்களுடனே பிறக்கிறான். யக்ஞம் முதலிய கர்மாக்களால் தேவர்களின் கடனையும் புத்ரோத்பத்தியால் பித்ருக்களின் கடனையும், அத்யயனத்தினால் ரிஷிகளின் கடனையும் பரிஹரித்துக்கொள்ளவேண்டும். ஆகவே தேவரிணபரிஹாரத்தின்பொருட்டு செய்யப்படும் யக்ஞம்முதலிய கர்மங்களுக்கு அங்கபூதமான ஸந்தியாவந்தனத்தைச் செய்யாவிடில் கடனிலிருந்து நாம் விடுபடுவதில்லை.

ऋणानि त्रीण्यपाकृत्य मनो मोक्षे निवेशयेत् ।
अनपाकृत्य मोक्षं तु सेवमानः पतत्यधः ॥

𑌋𑌣𑌾𑌨𑌿 𑌤𑍍𑌰𑍀𑌣𑍍𑌯𑌪𑌾𑌕𑍃𑌤𑍍𑌯 𑌮𑌨𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑍇 𑌨𑌿𑌵𑍇𑌶𑌯𑍇𑌤𑍍 ।
𑌅𑌨𑌪𑌾𑌕𑍃𑌤𑍍𑌯 𑌮𑍋𑌕𑍍𑌷𑌂 𑌤𑍁 𑌸𑍇𑌵𑌮𑌾𑌨𑌃 𑌪𑌤𑌤𑍍𑌯𑌧𑌃 ॥

'மூன்று கடன்களையும் போக்கிக்கொள்ளாமல் மோக்ஷத்தை விரும்புகிறவன் அதோகதியடைகிறான்' என்ற வசனத்தின்படி மஹா அனர்த்தமும் விளையும், அதனாலும் ஸந்தியாவந்தனத்தைச் செய்யவேண்டும்.

சங்கை:— தேவதைகளிடமிருந்து நாம் என்றாகிலும் பணத்தைக் கடன்வாங்கியிருந்தால் நாம் கடனாளியாகவே பிறப்போம். நாம் அம்மாதிரி ஒருபோதும் கடன்வாங்கவில்லையே! இப்படியிருக்க ஒவ்வொருவனும் கடனுடனே பிறக்கிறான் என்பது யுக்தமா ?

ஸமாதானம்:— பணத்தைக் கடன்வாங்கினால்தான் கடனாளி என்று அர்த்தமல்ல. உலகத்தில் ஒருவன் மற்றொருவனால் ஏதாவதொரு உபகாரத்தைப் பெற்றிருந்து அவ்வுபகாரத்திற்குப் பிரத்யுபகாரம் இவன் செய்யாதவரையில் இவன் கடனாளியாகவே

கருதப்படுகின்றான் என்பதும் எல்லாரும் அறிந்த விஷயமே. பிரகிருதம் நாம் சூரியன் முதலிய தேவதைகளிடமிருந்து உஷ்ணம், மழை முதலிய எண்ணிறந்த உபகாரங்களை அடைகிறோம். நமக்கு அன்னபானாதிகள் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் சூரிய வெளிச்சம். சூரியவெளிச்சத்திலுள்ள Electrical Fluid ஓர் மின்சார சக்தியானது நம் தேகங்களில் பிரவேசித்து வியாதிகளைக் கண்டித்து சுகத்தைப் பெருக்குகின்றது. இன்னும் பூகோளம் மூலமாய் சூரிய வெளிச்சம் இல்லாத பிரதேசங்கள் வாஸயோக்கியமற்றவையாயும், வியாதிகளுக்கு இருப்பிடமாயுமுள்ளவை என்று அறியலாம். பின்னும் சூரிய வெளிச்சத்தாலுண்டாகும் பல நன்மைகளை நாம் இங்கு விஸ்தரிக்க அவகாசமில்லை. இம்மாதிரியான பல உபகாரங்களை சூரியன்போன்ற தேவர்களிடமிருந்து பெறும் நாம் அவர்களுக்கு எப்படிக்கடனாளிகளாக ஆகமாட்டோம்.

சங்கை:— இதனால் மழை முதலிய உபகாரங்களை நாம் சூரியனிடமிருந்து பெறுவதால் நாம் அவனுக்குக் கடனாளியென்றும் அக்கடனைத்தீர்த்துக்கொள்ள நாம் ஸந்தியாவந்தனம்செய்ய வேண்டும் என்றும் ஏற்படுகிறதல்லவா! அதே உபகாரங்களைப் பெறும் சூத்திரர் முதலிய பலரும் தத்தம் கடனைத் தீர்த்துக்கொள்ள ஸந்தியாவந்தனம் செய்வது அவசியமன்றோ! அவர்களுக்கு ஸந்தியாவந்தனம் செய்ய அதிகாரமில்லை என்றால் அவர்கள் எப்படித் தம் கடன்களைத் தீர்த்துக்கொள்வது?

ஸமாதானம்:— சூத்திரர்களும் அப்பேர்ப்பட்ட உபகாரத்தைப் பெறுவதால் கடனாளிகள் என்பது உண்மையே. ஆயினும் அவர்கள் அக்கடனைச்சந்தியாவந்தனத்தினாலேயே தீர்க்கவேண்டும் வேறு விதத்தால் தீர்க்கக்கூடாது என்று என்ன நிர்ப்பந்தம்? பகவான் ஸகலப் பிரஜைகளைச் சிருஷ்டிக்கும்போதே அவரவர்களுக்கு யோக்கியமான வர்ணாச்ரம தர்மங்களையும் ஸ்தாபித்து ஒவ்வொருவரும் தத்தம்வர்ணாச்ரம தர்மத்தையே அனுஷ்டிக்கவேண்டும்: பிற வர்ணாச்ரம தர்மத்தை அனுஷ்டிக்கக்கூடாது; அப்படி மீறி அனுஷ்டித்தால் மஹா அனர்த்தங்கள் உண்டாகும் என்பதை கீதா முதலிய நூல்களில் விதித்திருக்கிறார். (தொடரும்)

M. ராமராவ்.